DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.173/2019 | Deposition of Witness for : PW7 |
| Name :திருமதி.மீனாகுமாரி | Father/Husband Name : ராஜாராம் |
| Age : 56 | Village : நாகர்கோவில் |
| Taluk :அகஸ்தீஸ்வரம் | Calling : காவல் உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15 July 2026.
Accused absent. Petiton U/s. 317 Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.07.2017 ஆம் தேதி நான் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்தேன். அன்றைய தினம் காலை 5.30 மணிக்கு சாத்தான்குளம் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முனியாண்டி நிலைய பொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து காலை 6.45 மணிக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கட்டாரிமங்கலம் ஆர்.சி கோவில் தெருவைச் சேர்ந்த ஆறுமுக நாடார் மகன் சுந்தரலிங்கம் என்பவரை விசாரணை செய்து, அவர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து அதில் அறிவேன் சாட்சியாக ஆறுமுகம் என்பவர் கையொப்பமிட்ட புகார் மனுவை பெற்று காலை 9.00 மணிக்கு நிலையம் வந்து சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண். 250/2017, ச/பி, 294(b), 324, 506(2) இதசவாக வழக்கு பதிவு செய்து புகார் மனுவின் அசலையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் கனம் சாத்தான்குளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும், மற்றொரு நகலை எனது மேல் விசாரணைக்கும் வைத்தார். மற்றொரு நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பினார். மேற்படி வழக்கு கோப்பினை பார்வையிட்டு சம்பவ இடமான தங்கையா தவமணி என்பவரின் தோப்பிற்கு சென்று மோசஸ், ஐயாக்கண்ணு என்பவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அதில் கிடைக்கப்பெற்ற பைப் மற்றும் வெட்டருவாளை அத்தாட்சியில் அவர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன். மேற்படி இரு நபர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்பு திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று சுந்தரலிங்கம், ஆறுமுகம் என்பர்களை விசாரித்து அப்பால் சிறப்பு உதவி ஆய்வாளர் முனியாண்டி என்பரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 22.07.2017 ஆம் தேதி எனக்கு கிடைத்த தகவலின்பேரில் 14.00 மணிக்கு சாத்தான்குளம் காமராஜர் சிலை முன்பு நின்று கொண்டிருந்த எதிரி தங்கையா தவமணி என்பரை அடையாளம் காட்டி, மாண்புமிகு உச்சநீதிமன்ற

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.15 12:57:02 +0530

கட்டளைகளை நிரைவேற்றி, உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து எதிரி தங்கையா தவமணி என்பரை 14.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்தும், தகுந்த வழிக்காவலுடன் கனம் சாத்தான்குளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பு ஆஜர் படுத்தினேன். மீண்டும் 28.09.2017 ஆம் தேதி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் சுகனா என்பவரிடம் இருந்து காய சான்றிதழ் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கிடைக்க பெற்ற காயச்சான்றிதழில் வாதிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கூறியதால் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட சட்ட பிரிவு 294(b), 324, 506(2) இதச என்பதிலிருந்து ச/பி. 294(b), 324, 326, 506(2) இதசவாக சட்டப்பிரிவை மாற்றி, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் சாத்தான்குளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்பு அன்றைய தினம் எதிரி மீது ச/பி 294(b), 324, 326, 506(2) இதசவாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 7 ஆகவும், அத்தாட்சி அ.சா.ஆ. 8 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ. 9 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சாஆ. 10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

2. முதல் தகவல் அறிக்கை, குற்ற இறுதி அறிக்கை ஆகிய ஆவணங்களில் சம்பவ இடமான எதிரியின் தோட்டத்திற்கு அருகில் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகசர், மாதிரி வரைபடத்தில் எதிரியின் தோட்டத்திற்குள் சம்பவம் நடைபெற்றதாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், சம்பவம் நடைபெற்ற இடமாக குறியீடு செய்யப்பட்ட இடம் மொத்தமும் எதிரி தங்கையா தவமணிக்கு சொந்தமான இடம் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் தோட்டத்திற்கு உள்ளே செல்லும் போது சம்பவம் நடைபெற்றதாக உள்ளது என்றால் தோட்டத்தின் அருகே போகும்போதுதான் எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ பார்த்து கெட்டவார்த்தை பேசி பிரச்சனை செய்ததாக புகாரிலும் உள்ளது, என்னுடைய விசாரணையிலும் அதுதான் தெரிய வந்துள்ளது. மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடந்தது தோட்டத்திற்கு உள்ளே என குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் முதல் தகவல் அறிக்கையிலும் குற்ற இறுதி அறிக்கையிலும் தோட்டத்திற்கு அருகே என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களது வாக்குமூலம் அடிப்படையில் நானும் என் அப்பாவும் எங்களுடைய தோட்டத்திற்கு மாலை 5.00 மணிக்கு சென்றோம், அப்போது அங்கு நின்ற சாமுவேல் என்பவரின் மகன் தங்கையா தவமணி என்பவர் எங்கள் இருவரையும் பார்த்து எனதான் 161(3) கு.வி.மு.ச வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதன். 3, 4 சாட்சிகளின் 161(3) கு.வி.மு.ச வாக்குமூலத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 நபர்களும் அவர்களது தோட்டத்திற்கு சென்றபோது அப்போது அங்கு நின்ற எதிரி தங்கையா தவமணி அவர்களை பார்த்து வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் அ.சா.1 சுந்தரலிங்கத்தின் இடது பக்க

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.15 12:57:13 +0530

தலையில் எந்த ஆயுதத்தால் தாக்கப்பட்டது என்ற விபரம் இல்லை என்றால் தங்கையா தவமணி என்பவர் தலையின் இடது பக்கத்தில் அடித்தார் அதில் எனக்கு தலையின் இடது பக்க தலையில் அடிப்பட்டது மேலும் கம்பியால் எனது இடது கை மணிக்கட்டில் அடித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரி அ.சா.1 ன் தலையில் எந்த ஆயுதத்தை வைத்து அடித்தார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் அதே கம்பியால் தான் அடித்தார், அந்த வார்த்தையின் தொடர்ச்சியாக பின்பு கம்பியை வைத்து அவர் அடித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, இது நான் கற்பனையில் சொல்லும் தவறான கருத்து என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை, 161(3) கு.வி.மு.ச வாக்குமூலம், புகார் வாக்குமூலம் ஆகியவற்றில் அ.சா.1 சுந்தரலிங்கத்திற்கு தலையின் இடது பக்கத்திலும், இடது கை மணிக்கட்டிலும் காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், இடது கை மணிக்கட்டில் வீக்க காயம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவர் அ.சா.1 க்கு இடது காது மற்றும் இடது உள்ளங்கை ஆகிய இடங்களில் காயங்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அருவாள் என்பதும் வெட்டருவாள் என்பதும் வேறுவேறு என்றால் சரிதான். கம்பி என்பது வேறு பைப் என்பது வேறு என்றால் சரிதான். அத்தாட்சியில் வெட்டருவாள் மற்றும் இரும்பு பைப் கைப்பற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்ற ஆவணங்களில் அருவாள் மற்றும் இரும்பு கம்பி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு ஆவணங்களில் பைப்கம்பி என்று எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பைப்கம்பி இல்லை இரும்புகம்பி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.2 க்கு முதல் தகவல் அறிக்கை, 161 கு.வி.மு.ச வாக்குமூலம், விசாரணை அறிக்கை ஆகியவற்றில் இடது பக்க இடுப்பில் கம்பியாலும், தலை நடுப்பாகம், இடது காது பின்பக்கம் ஆகியவற்றில் அருவாளால் தாக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் அ.சா.2 ஆறுமுகத்திற்கு அருவாளால் தலையிலும் காதுகளிலும் வெட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகள் அனைவரும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் உறவினர்கள் என்றால் எனக்கு தெரியாது, சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகளை தான் விசாரித்தேன். நான் மருத்துவரை விசாரித்த போது அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு எந்நெந்த இடங்களில் காயம் ஏற்பட்டது என்று அவர் கூறினார் என்றால் அ.சா.1 க்கு கையில் வெட்டுக்காயம், இடது காது பக்கத்தில் வெட்டுக்காயமும் அ.சா.2 க்கு தலையிலும், காதிலும் காயம் ஏற்பட்டதாக கூறினார். அ.சா.1 சுந்தரலிங்கம் தனது ஆடைகளிலும் இரத்தம் படிந்ததாகவோ அல்லது சம்பவ இடத்தில் எங்கேனும் இரத்தம் படிந்ததாக என்னிடம் சொன்னாரா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை, அவருக்கு காயம் இருந்தது அதை நான் பார்த்தேன். பார்வை மகசர், மாதிரி வரைபடம் ஆகியவற்றில் சம்பவ இடத்தில் இரத்தக்கறை படிந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் பொதுவாக இரத்தம் படிந்ததாக குறிப்பிடபடாது, கொலை வழக்குகளில் அவ்வாறு இருக்கும். நீங்கள் கூறுவது தவறு என்றாலும், எந்த வழக்காக இருந்தாலும் இரத்தம் படிந்த விபரத்தை பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவ இடத்தில் அ.சா.1 சுந்தரலிங்கம் என்பவரின் மகன் சுடலைமணி என்பவர் இருந்தார் என்பது வழக்கு ஆவணங்களில் துலங்குமா என்றால் இல்லை.

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.15 12:57:20 +0530

இடப்பிரச்சனை சம்பந்தமான அ.சா.1, அ.சா.2 க்கும் எதிரிக்கும் இடைய பிரச்சரனை இருந்ததை மனதில் வைத்து கொண்டு எதிரி மீது பொய்யாக புகார் வாக்குமூலம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 161 கு.வி.மு.ச வாக்குமூலம் பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் முனியாண்டி என்பவர் வழக்கு சம்பவம் நடைபெற்ற போது வெளி அலுவலில் இருந்ததாக தன்னுடைய விசாரணை அறிக்கையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். சிறப்பு உதவி ஆய்வாளர் முனியாண்டி என்பவர் வெளி அலுவலில் இருக்கும் போது எங்கு இருந்து யாரிடம் இருந்து தனக்கு தகவல் கிடைத்தாக விசாரணை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வாறு வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எந்த சாட்சிகளையும் விசாரிக்காமல் அ.சா.1 ன் தகவலின் பேரில் கிடைத்த தகவலின் படி பொய்யான விசாரணை அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாத்தான்குளம் காமராஜர் சிலை அருகே வைத்து எதிரியை கைது செய்யும் போது அடையாளம் காட்டியது யார் என்று என்னுடைய விசாரணையில் துலங்குமா என்றால் தகவல் அளித்தவரின் பெயரை நாங்கள் வெளியே சொல்ல மாட்டோம். வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரியை நான் சொன்ன மாதிரி கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.2 தோட்டத்தில் ஆடு மேய்க்கும் போது தாமாக தவறி கீழே விழுந்துவிட்டார் இதைப் பார்த்து பனையில் இருந்து இறங்கி கொண்டிருந்த அ.சா.1 அவசரமாக இறங்கும் போது தவறி கீழே விழுந்து விட்டார் இந்த இரண்டு வகையிலும் தான் அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த காயங்களை பயன்படுத்தி தான் எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.15 12:57:27 +0530

Judicial Magistrate, Sathankulam.